6. சட்டமுன் வடிவுகள் (அறிமுகம்)

வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1989-90 அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989—90 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

11-20மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,1989-90-ஆம்ஆண்டிற்கான முதல்துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம் மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 5,82.87 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் ரூபாய் 2,15,86 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூபாய் 3,67.01 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும். இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப் பணிகள் குறித்து சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.